பக்கங்கள்:-15

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஆனி 21 | சனிக்கிழமை | 05.07.2025 | அதிர்வு 335

## இன்று ஜூலை 5 கரும்புலிகள் நாள்



இன்று கரும்புலிகள் நாள். அடிமுடி தெரியாத அற்புத மாமனிதர்களை நினைவேந்தும் நாள் இன்று. தமிழீழ விடுதலைப் 08





# செம்மணியில் நேற்று 3 சிறுவர்களின் எலும்புக்கூடுகள் முழுமையாக அகழ்வு

## இதுவரை 42 மனித என்புத் தொகுதிகள் அடையாளம்

(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

**யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்றைய அகழ்வின் போது சிறுவர்களின் என்புத் தொகுதி எனச் சந்தேகிக்கப்படும் மூன்று என்புத் தொகுதிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இந்த மனிதப் புதைகுழியில் இதுவரை 42 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.** 08



# சிறுமியின் ஆடை ஒன்று முழுமையாக அகழ்வு



**(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)**

மனிதப் புதைகுழி அடையாளம் காணப்பட்ட யாழ். செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் மேலும் மனிதப் புதைகுழிகள் இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்பட்டு அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட புதிய பகுதியில் இருந்து நேற்று வெள்ளிக்கிழமை சிறுமியின் ஆடை ஒன்று முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆடையின் சில பகுதிகள் நேற்றுமுன்தினம் அடையாளம் காணப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழிக்கு அருகில் மேலும் புதைகுழிகள் இருக்கலாம் எனச் 07




உள்ளூராட்சித் தேர்தல் முடிந்துவிட்டது. உள்ளூராட்சி சபைகள் தோறும் நிர்வாகங்களை அமைக்கும் விடயமும் ஒப்பேறிவிட்டது.

வழமையாக இத்தகைய விடயங்களில் குளறுபடி பண்ணுவோர்கள் தொடர்பில் கட்சிகள் நடவடிக்கை எடுப்பது குறைவு. ஆனால் இம்முறை நிலைமை அப்படி அல்ல. பல கட்சிகளும், கட்சித் தலைமையின் வழிகாட்டல்களுக்கு மாறாக செயல்பட்ட உறுப்பினர்கள் விடயத்தில் நடவடிக்கை எடுக்கத் தொடங்கி விட்டன.

கட்சி ஒழுங்கு நடவடிக்கை காரணமாக கட்சியிலிருந்து வெளியேற்றப்படும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் அதன் காரணமாக பதவியை இழந்தவர்களாகிவிடுவர். அதுதான் சட்ட ஏற்பாடு. விருப்பமானால் அந்த உறுப்பினர் கட்சி தமக்கு எதிராக எடுத்த நடவடிக்கையை ஆட்சேபித்து நீதிமன்றுக்குப் போகலாம். கட்சியின் நடவடிக்கை தொடர்பில் நீதிமன்றத்தில் ஒரு தீர்ப்பை அல்லது தடை உத்தரவைப் பெற்று வந்தால் மட்டுமே மீண்டும் சபை 06



# வவுனியா வடக்கில் மகாவலித் திட்டத்தின் கீழ் புதிதாக 350 ஏக்கர் நிலம் பறிபோகும் அபாயம்

**(கி.வசந்தன்)**

வவுனியா வடக்கு, வெடிவைத்த கல்லு பகுதியில் மகாவலி திட்டத்தின கீழ் 350 ஏக்கர் நிலம் தமிழ் மக்களிடம் இருந்து பறிபோகும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

மகாவலி திட்டத்தின் மூலம் தமிழ் மக்களின் இனப் பரம்பலை சீர்குலைக் கும் செயற்பாடுகள் கடந்த காலங்களில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்திருந்தது. வெடிவைத்தகல் கிராம அலுவலர் பிரிவில் கொக்கச்சான்குளம் அபகரிக்கப்பட்டு கலாபோகஸ்வேவ என்னும் பெயரில் புதிய குடியேற்றம் மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் உரு வாக்கப்பட்டிருந்தது.

அதன் தொடர்ச்சியாக, தற்போது வெடிவைத்தகல்லு கிராம அலுவலர் பிரிவில் உள்ள மற்றொரு கிராமமான திரிவைச்சகுளம் பகுதியில் 350 ஏக்கர் நிலம் மகாவலி வலயம் என்ற போர் வையில் உள்வாங்கப்பட்டு துப்பரவு செய்யப்பட்டுள்ளது. குறித்த நிலத்தை தென்பகுதி நிறுவனம் ஒன்றுககும், பெரும்பான்மை சிங்கள மக்களுக்கும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

தமிழ்ப் பேசும் நாடாளுமன்ற உறுப் பினர்கள் இந்த விடயத்தில் கவனம் செலுத்தி தமிழ் மக்களின் நிலங்கள் மகாவலி திட்டம் என்ற போர்வையில் கபளீகரம் செய்யப்பட்டு குடியேற்றங்கள் இடம்பெறுவதை தடுக்க முன்வர வேண்டும் என்பதே மக்களின் எதிர்-பார்ப்பாகும்.

# கற்பிட்டி பத்தளங்குண்டு கடல் பகுதிக்கு அப்பால் ஐந்து பொதிகளில் கடத்தல் பொருள்கள் சிக்கின









**(கற்பிட்டி எம்.எச்.எம்.சியாஜ்)**

கற்பிட்டி பத்தளங்குண்டு தீவுக்கு அப்பால் உள்ள கடல் பகுதியில் இலங்கை கடற்படையினர் கடந்த வியாழக்கிழமை நடத்திய சிறப்புத் தேடுதல் நடவடிக்கையின் போது சட்ட விரோதமாக நாட்டுக்குள் கொண்டு வரப்பட இருந்த 91 கிலோ உலர்ந்த இஞ்சி மற்றும் 238 சோடி காலணிகள் அடங்கிய ஐந்து பொதிகள் கடத்தல் காரர்களினால் கடலில் கைவிடப்பட்ட நிலையில் கைப்பற்றியுள்ளனர்.

இந்த நடவடிக்கையின் போது கைப் பற்றப்பட்ட உலர்ந்த இஞ்சி மற்றும் காலணிகள் மேலதிக சட்ட நடவடிக் கைகளுக்காக கட்டுநாயக்க சுங்க தடுப்பு அலுவலகத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளன எனத் தெரிவித்துள்ளனர்.



# தமிழருக்கு நீதியை வழங்கியே தீருவோம்

## அநுர அரசு திடசங்கற்பம்

“வடக்கு தமிழ் மக்கள் நீதியை எதிர்பார்க்கின்றனர். அதன் அடிப்படையிலேயே தேசிய மக்கள் சக்திக்கு அவர்கள் ஆணை வழங்கினர். அந்த மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேற்றப்படும்.”

– இவ்வாறு நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போது எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்துக்குரிய முயற்சிகள் தொடரும். இந்த விடயத்தில் கடந்தகால அரசுகளை விட எமக்கே கூடுதல் பொறுப்பு உள்ளது. கடந்த வரவு – செலவுத் திட்டத்தில் கூட வடக்குக்குக் கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எவ்வித பாகுபாடும் காட்டப்படவில்லை.

காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை உள்ளிட்ட விடயங்களுக்கும் தீர்வு காணப்பட வேண்டும். எமது பிரச்சினையை அரசு உணர்ந்துள்ளது, எனவே, நீதியை வழங்கும் என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் ஏற்பட்டால்தான் பிரச்சினைகள் முழுமையாகத் தீரும். அதற்குரிய நடவடிக்கையையே நாம் முன்னெடுத்து வருகின்றோம்.”

– என்றார்.

# 3 கைத்துப்பாக்கிகளுடன் ஒருவர் வசமாகச் சிக்கினார்



மூன்று கைத்துப்பாக்கிகளுடன் ஆண் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை, திஸ்ஸமஹாராமை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் மேற்படி நபர் கைது செய்யயப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

திஸ்ஸமஹாராமை பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே மேற்படி நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் திஸ்ஸமஹாராமை பகுதியைச் சேர்ந்த 48 வயதுடையவர் ஆவார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைத் திஸ்ஸமஹாராமை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# கைது பயத்தைக் காட்டி எம்மை ஒடுக்க முடியாது!

## நாமல் எம்.பி. சூளுரை

"கைது செய்யப்படுவீர்கள், சிறையில் அடைக்கப்படுவீர்கள் என அச்சுறுத்தி எதிரணிகளை மௌனிக்க வைப்பதற்கு அரசு முற்பட்டால், அந்த விடயம் ஒருபோதும் நடக்காது."

– இவ்வாறு சூளுரைத்துள்ளார் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம்.பி.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைமையகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் நாமல் ராஜபக்ஷ ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டார்.

இதன்போது முன்னாள் அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன கைது செய்யப்பட்டுள்ள விவகாரம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்த நாட்டின் சுயாதீன நீதித்துறை மற்றும் நீதிபதிகள் மீது எமக்கு நம்பிக்கை உள்ளது. எனவே, எமக்கு எதிராகக் குற்றச்சாட்டுகள் இருந்தால் அவற்றைச் சட்டத்தின் பிரகாரம் எதிர்கொள்வோம். குற்றமற்றவர்கள் என்பதை நீதிமன்ற நடவடிக்கை ஊடாக நிரூபிப்போம்.

அச்சுறுத்தல் மூலம் எதிரணிகளை மௌனிக்க வைக்கலாம் என அரசு நினைத்தால், அது ஒருபோதும் நடக்காது. அரசு தவறிழைத்தால் அதனைத் தொடர்ந்து துணிவுடன் சுட்டிக்காட்டுவோம்." – என்றார்.

# மயிலிட்டி திருப்பூர் பேச்சியம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம்



மயிலிட்டி திருப்பூர் அருள்மிகு பேச்சியம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 13 நாள்கள் இடம்பெற உள்ளது.

வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு 17ஆம் திகதி வியாழக்கிழமை சாந்தி பூசை வழிபாடுகள் இடம்பெற்று 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு வசந்த மண்டப பூசை இடம்பெற்று காலை 9.30 மணிக்கு சுபமுகூர்த்த சுபமுகூர்த்த வேளையில் கொடியேற்றம் இடம்பெற உள்ளது.

தொடர்ந்து 11 தினங்கள் மகோற்சவம் இடம்பெற்று விசேட திருவிழாக்கள் இரண்டு நாள்களும் சேர்த்து 13 நாள்கள் திருவிழா இடம்பெற உள்ளது.

அந்தவகையில், மகோற்சவத்தின் 8 ஆம் நாள் எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேட்டைத் திருவிழாவும், சனிக்கிழமை சப்பை ரத திருவிழாவும், 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 10 ஆம் நாள் திருவிழாவாக தேர்த்திருவிழா இடம்பெற்று 28 ஆம் திகதி திங்கட்கிழமை சமுத்திர தீர்த்தம் இடம்பெற்று அன்றைய தினம் மாலை 6.00 மணிக்கு கொடி இறக்கம் இடம்பெற உள்ளது.

பிராயச்சித்த பூசை வழிபாடுகள் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்று பிற்பகல் பூங்காவனத் திருவிழாவை தொடர்ந்து தெப்பத்திருவிழாவும் இடம்பெற உள்ளன. தொடர்ந்து 30 ஆம் திகதி புதன்கிழமை காலை வைரவர் அபிசேகம் இடம்பெற்று பிற்பகல் வைரவர் பொங்கல் இடம்பெற உள்ளது.

கொடியேற்ற தினத்தை தவிர்த்து ஏனைய மகோற்சவ தினங்களில் தினமும் வசந்தமண்டப பூசை காலை 10.00 மணிக்கும் மாலை 6.30 மணிக்கும் ஆரம்பமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.




# சிங்கள - தமிழ் மொழிபெயர்ப்புக்கு புதிய மென்பொருள் தயாராகின்றது

ஏ.ஐ. தொழில்நுட்பத்தின் ஊடாக சிங்கள – தமிழ் மொழிபெயர்ப்புக்கான மென்பொருளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக டிஜிட்டல் பொருளாதார அமைச்சு தெரிவிக்கின்றது.

மொறட்டுவை பல்கலைக்கழகம் உள்ளிட்ட சில பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் பிரிவுடன் இணைந்து இந்த மென்பொருள் தயாரிக்கப்படவுள்ளதாக பிரதியமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 06 மாதங்களுக்குள் இந்த மென்பொருளை சாதாரண மக்களுக்காக வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய மென்பொருளினூடாக சிங்களத்தில் உரையாடி சில செக்கன்களில் தமிழ் மொழிக்கும் தமிழ் மொழியில் உரையாடி சில செக்கன்களில் சிங்கள மொழிக்கும் மொழிபெயர்ப்பு செய்வதற்கான இயலுமை ஏற்படுத்தப்படும் என டிஜிட்டல் பொருளாதார பிரதியமைச்சர் எரங்க வீரரத்ன நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

# வாக்குமூலம் வழங்கும் நபர்களுக்கான புதிய சுற்றுநிரூபம் வெளியிடப்பட்டது

ஏதேனுமொரு முறைப்பாடு சம்பந்தமாக வாக்குமூலம் பெறுவதற்காக ஒருவரை அழைக்கும்போது முறைப்பாட்டில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் தொடர்பில் அந்த நபருக்கு தெளிவுபடுத்த வேண்டிய விதம் குறித்து வழிகாட்டல்களை வழங்கும் சுற்றுநிரூபம் பதில் பொலிஸ் மா அதிபரினால் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த சுற்றுநிரூபம் நாட்டின் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சட்ட மாஅதிபரினால் உயர் நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

வலுசக்தி நிபுணரான விதுர ருலபனாவ என்பவரால் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கணினிக் குற்ற விசாரணைப் பிரிவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மனு நேற்று அழைக்கப்பட்ட போதே சட்ட மாஅதிபர் நீதிமன்றுக்கு இதனை தெரியப்படுத்தினார்.

அச்சல வெங்கப்புலி மற்றும் சம்பத் விஜயரத்ன ஆகியோர் அடங்கிய உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.



தாம் சமூக வலைத்தளத்தில் வெளியிட்ட கருத்து தொடர்பில் வாக்குமூலம் பெற வேண்டுமென குறிப்பிட்டு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கணினிக் குற்ற விசாரணைப் பிரிவின் அதிகாரியொருவரினால் தொலைபேசி மூலம் அறிவிக்கப்பட்டதாக மனுதாரர் நீதிமன்றில் குறிப்பிட்டார்.

பின்னர் தமக்கு எதிரான முறைப்பாடு என்ன என்பது தொடர்பிலும் அதில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் என்ன என்றும் பொலிஸாரிடம் தாம் வினவிய போதிலும் அதற்கு அவர்கள் பதிலளிக்க மறுத்தனர் என மனுதாரர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அவ்வாறு தகவல் வழங்க மறுப்பு தெரிவித்ததன் ஊடாக பிரதிவாதியான பொலிஸ் அதிகாரிகள் தமது அடிப்படை உரிமையை மீறியதாக தீர்ப்பளிக்குமாறு கோரி மனுதாரரினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது பொலிஸ் மாஅதிபர் தேஷபந்து தென்னக்கோன் உள்ளிட்ட கணினிக் குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகள் இதற்கு முன்னர் நீதிமன்றத்தில் முன்னிலையாகி வழங்கிய சமர்ப்பணங்களுக்கு அமைய சுற்றுநிரூபம் தயாரிக்கப்பட்டு நாட்டின் பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சட்ட மாஅதிபரினால் நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பு தொடர்பில் தாம் திருப்தி அடைவதாகவும் இதற்கமைய மனு மீதான விசாரணைகளை நிறைவு செய்ய முடியுமெனவும் மனுதாரர் சார்பில் ஆஜராக சட்டத்தரணி நீதிமன்றுக்கு தெரியப்படுத்தினார்.

இதற்கமைய மனு மீதான விசாரணைகளை நிறைவு செய்ய உயர்நீதிமன்றம் தீர்மானித்தது.

இந்த மனுவில் பொலிஸ் மா அதிபர் தேஷபந்து தென்னகோன், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கணினிக் குற்ற விசாரணைப் பிரிவின் உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர், அந்த பிரிவின் பொறுப்பதிகாரி உள்ளிட்ட தரப்பினர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உறுப்பினராக வாய்ப்புக் கிட்டும். பொதுவாக நீதிமன்ற நடவடிக்கை முடிவதற்கு இடையில் உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலங்கள் முடிந்து விடுவது உண்டு.

வழமையாக இத்தகைய விடயங்களில் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதில் மெத்தனமாக இருக்கும் தமிழரசுக் கட்சி இப்போது சுறுசுறுப்பாக செயல்படத் தொடங்கி இருப்பதாகத் தெரிகின்றது.

ஏற்கனவே முல்லைத்தீவு மாந்தை கிழக்கு, திருகோணமலை பட்டணமும் சூழலும், குச்சவெளி, ஊர்காவற்றுறை, வலிகாமம் வடக்கு எனப் பலவற்றின் உறுப்பினர்களுக்கு எதிராக விளக்கம் கோரும் கடிதங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன எனத் தெரிகின்றது.

உரிய காலத்தில் ஏற்றுக்கொள்ளப் படக்கூடிய விளக்கத்தை சம்பந்தப்பட்ட தரப்பினர் தராவிட்டால் அந்த இடத்துக்கு புதிய உறுப்பினர் நியமனமாகும் சாத்தியம் அதிகம் உண்டு.

விரைவில் அதற்கான போட்டா போட்டி, வேட்பாளர் பட்டியலில் இருக்கும் உறுப்பினர்களிடையே சூடு பிடிக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

மன்னாரில் தமிழரசுக்கு ஏற்பட்ட பெரும் பின்னடைவு குறித்து விவரமாக விசாரித்து ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக் கட்சித் தலைமை தீர்மானித்திருப்பதாகவும் அறிய வருகின்றது. அதனால் மன்னார் விவகாரத்தில் சற்றுக் காலதாமதம் ஏற்பட இடம் உண்டு.

முதல் கட்டமாக நேரடியாக சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை கட்டவிழ்கின்றது. அடுத்து, கட்சியில் பொறுப்புள்ள பதவிகளில் இருந்து கொண்டு குசும்புத்தனம் பண்ணிய மாவட்ட நிர்வாகிகள் மீதும் தமிழரசுத் தலைமையின் ஒழுங்கு நடவடிக்கை பாயும் என்று தெரிகிறது.

கட்சியை ஒரு கட்டுக்கோப்புக்குள் கொண்டு வருவதற்காக அதிகம் இறுக்கிப்பிடிப்பதற்கு கட்சித் தலைமை தீர்மானித்திருப்பதாகவும் தோன்றுகின்றது.

இந்த அழுத்தம் பயன் தருமா அல்லது கட்சியை பின்னடைவுக்குள் தள்ளுமா என்பதற்குக் காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

ஆயினும் உள்கட்சி ஒழுங்குபடுத்தலை ஒட்டி எழக்கூடிய சட்டப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதற்காக தமிழரசுக் கட்சி ஒரு சட்டப்பிரிவை தனித்து இயக்க வேண்டி வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

\+ + +

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் துணைவியார் ஷிராந்தி ராஜபக்ஷ எப்போதும் கைது செய்யப்படக்கூடிய சூழ்நிலை இருப்பதாக சமூக ஊடகங்களில் விறுவிறுப்பான செய்திகள் வெளியாகி வந்தன. அது பற்றிய தகவல் முரசிலும் வெளியாகி இருந்தது.

இவ்விடயத்தை நேரடியாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்திடம் கேட்டது ஒரு சிங்கள ஊடக நிறுவனம்.

“அப்படி ஒரு நிலைமை இருப்பதாக எனக்கு எதுவும் தெரியாது. சமூக ஊடகச் செய்திகள் எல்லாவற்றையும் நம்புவதில் அர்த்தமில்லை.” – என்ற சாரப்படப் பதிலளித்திருக்கிறார் அமைச்சர் விஜித ஹேரத்.

\+ + +

இந்தப் பத்தி சுயபிரலாபம் பண்ணுவதற்கானது அல்ல. ஆனாலும் அவ்வப்போது அது பற்றிக் குறிப்பிட வேண்டியுமிருக்கின்றது. இன்றும் அத்தகைய ஒன்று. அதற்காக என் வாசகர்களிடம் முற்கூட்டியே மன்னிப்புக் கோருகிறேன்.

நேற்று என்னைப் பற்றி முகப்புத் தகத்தில் வந்த இரண்டு விடயங்கள் குறித்து சிலர் தொலைபேசி அழைப்பு எடுத்துப் பேசினார்கள். ஒன்று – என்னைத் தாறுமாறாக விமர்சித்து வந்திருந்த விடயம் பற்றியது. மற்றது – என்னைச் சிலாகித்து குறிப்பிடப்பட்டது.

அவை பற்றி எனக்கு அழைப்பு எடுத்தவர்களுக்கு நான் குறிப்பிட்ட பதிலை இங்கும் பரிமாறிக் கொள்ள விரும்புகிறேன்.

கடந்த 46ஆண்டுகளாக இந்த ஊடகத் தளத்தில் இருக்கிறேன். ஏறத்தாழ 35 ஆண்டுகளுக்கு மேல் ஆசிரியராகப் பணியாற்றி வருகிறேன். இதில் குறைந்தது 25 ஆண்டுகள் யுத்தத்திற்கு மத்தியில் – மரணங்கள் மலிந்த பூமியில் – என் பணியும் பொறுப்பும் அமைந்தன. அப்போதெல்லாம் என் பத்திரிகையில் வருகின்ற எல்லாச் செய்திக்கும் நானே பொறுப்பு என்று முகம் கொடுத்து இருக்கிறேன். பெரும்பாலும் பாதுகாப்பு கருதி செய்தியாளர்களின் பெயர்களை அப்போது நாங்கள் வெளியிடுவதில்லை. எல்லாச் செய்திகளுக்கும் நானே பொறுப்பு என்று கடப்பாட்டை வெளிப்படுத்தி முன்நின்றிருக்கின்றேன். நான் பணியாற்றிய யாழ் பத்திரிகைக்கு மாத்திரம் அல்லாமல், கொழும்பில் நாங்கள் அச்சிட்ட பத்திரிகைக்கும் சுமார் பத்து வருடங்கள் நான் பொறுப்பாசிரியராக முகம் கொடுத்திருக்கிறேன். இவையெல்லாம் நாங்கள் ஒளித்திருந்து – எங்களை மறைத்திருந்து – ஒளிவு மறைவாகச் செய்த விடயங்கள் அல்ல. நேராகப் பத்திரிகை அலுவலகத்தில் இருந்தபடி – செய்திகளினால் எழுகின்ற பிரச்சினைகளை எதிர்கொண்டபடி – அதற்கான பொறுப்பை ஏற்றபடி – நாங்கள் செய்தவை. அது நாட்டின் தலைவர்களான ஜெயவர்த்தனாவாகவோ, பிரேமதாஸாவாகவோ, சந்திரிகாவாகவோ, ராஜபக்ஷக்களாகவோ இருக்கலாம். அல்லது இராணுவ தளபதிகளாகவோ, இந்தியப் படையின் தளபதிகளாவோ இருக்கலாம். அல்லது விடுதலைப் புலிகளாகவோ பிற தமிழ் இயக்கங்களாகவோ இருக்கலாம். எல்லாவற்றுக்கு எதிராகவும் மோதுகின்ற செய்திகளை, எங்கள் முகம் தெரிய, எங்கள் விலாசம் தெரிய, வெளிப்படுத்தி அமர்ந்து கொண்டுதான் நாங்கள் பிரசுரித்து, எதிர்கொண்டோம். அனாமேதயமாக – ஒளிவு மறைவாக – இருந்து நாங்கள் செய்தி வெளியிடவில்லை. அல்லது இப்போது பலரும் தங்கள் முகத்தை வெளிப்படுத்தாமல், எதிரில் இருக்கும் எல்லோரையும் வசைபாடும் விதத்தில் செயற்படுவது போன்று நாங்கள் செயற்பட்டவர்கள் அல்லர். துணிந்து, எங்களை வெளிப்படுத்தி – அம்பலப்படுத்தி – சட்ட விளைவுகள், பொறுப்புக் கூறல் கடப்பாடு யாவற்றுக்கும் முகம் கொடுத்தபடி பகிரங்கமாகவே செயற்பட்டோம். செயற்படுகின்றோம். ஆகவே தங்கள் முகத்தை வெளிப்படுத்தாமல் அல்லது தாங்கள் எழுதும் கருத்துக்குப் பொறுப்பு கூறும் கடப்பாட்டை வெளிப்படையாக மக்கள் முன்னிறுத்தாமல், ஒளிவு மறைவாகத் திட்டித் தீர்க்கும் கருத்துக்களுக்கு எல்லாம் நான் பதில் கொடுக்கப் போவதில்லை. அதில் மிகத் தெளிவாகவும் உறுதியாகவும் இருக்கிறேன் என்பதை விளங்கப்படுத்தினேன்.

அடுத்தது – என்னைச் சிலாகித்து நண்பர் ஒருவர் குறிப்பிட்ட விடயம். தினசரி இரண்டு செய்தி பத்திரிகைகளின் செய்திகளைக் கையாளுகின்றமைக்கு அப்பால், இரண்டு ஆசிரியர் தலையங்கங்கள், ஒரு தினசரி பத்தி என்று நான் கடுமையாக உழைக்கிறேன் என்று அவர் என்னை மெச்சி இருந்தார். உண்மை தான்.

அதை வாசித்து விட்டு நேற்று இரவு வெளிநாட்டில் இருந்து என்னோடு தொடர்பு கொண்ட ஒரு நண்பரிடம் இந்த பத்திரிகைத்துறைப் பணியில் நான் எத்தனை ஆசிரியர் தலையங்கங்கள் எழுதியிருப்பேன் என்று ஒரு பேச்சுக்குக் கேட்டு வைத்தேன்.

அவரால் ஊகிக்க முடியவில்லை. நான் கூறிய பதிலை கேட்டு அவர் ஆச்சரியப்பட்டார். நம்பவில்லை.

இலங்கையில் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட ஆசிரியர் தலையங்கங்களை நான் எழுதியிருக்கின்றேன் என்பதை அவர் உட்பட எவரும் நம்ப மாட்டார்கள்.

ஒரு சின்னக் கணக்கு. இப்போது முரசு இரண்டு வருடங்களாக வெளிவருகின்றது. தவறாது காலையிலும் மாலையிலும் ஆசிரியர் தலையங்கம். இன்னும் ஒரு மாதம் கூடப் போனால் முரசில் மட்டும் நான் எழுதிய ஆசிரியர் தலையங்கங்களின் எண்ணிக்கை 1,500 ஐ எட்டிவிடும்.

காலைக்கதிரில் ஆறு வருடங்களுக்கு மேல் ஆசிரியராக இருந்தேன். அதில் கடைசி இரண்டரை, மூன்று வருடங்கள் இரண்டு நேரமும் அந்தப் பத்திரிகை வெளியாகியது. அதன்படி பார்த்தால் அங்கு சுமார் 3,500 ஆசிரியர் தலையங்கங்களை எழுதியிருப்பேன்.


உதயனில் சுமார் 25 வருடங்களும், சுடர்ஒளியில் பத்து வருடங்களும் நான் பணியாற்றிய காலத்தில் எவ்வளவு ஆசிரியர் தலையங்கங்களை எழுதியிருப்பேன் என்று ஊகித்துக் கொள்ளுங்கள்.

பத்திரிகை ஆசிரியர்களாக இருந்த பலரும் தங்களின் ஆசிரியர் தலையங்கங்களை அவற்றில் சிறந்தவற்றை தொகுத்து புத்தகங்களாக வெளியிட்டிருக்கிறார்கள். அப்படிக் கருத்துக்கு எடுத்துக் கொள்ளக்கூடிய பல நூறு ஆசிரியர் தலையங்கங்களை எழுதி இருப்பேன் என்று நான் கூறிய போது தான் அந்த நண்பர் நான் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட ஆசிரியர் தலையங்கங்களை எழுதி இருப்பேன் என்ற வியப்பான உண்மையை ஒப்புக்கொண்டார்.

விடுதலைப் போராட்ட காலத்தில் தமிழ் அரசியல் செல்நெறியை சர்வதேச மட்டங்கள் வரை பிரதிபலிக்கும் தளமாக எனது ஆசிரியர் தலையங்கங்கள் இருந்தன என்பதை திருப்தியோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

என்னுடைய ஆசிரியர் தலையங்கங்களில் வரிகளுக்கு இடையில் கோடி காட்டும் விடயங்கள் தமிழர் தரப்பின் அரசியல் பிரதிபலிப்பாகக் கொள்ளப்பட்டன என்பதையும், அதற்காக என் ஆசிரியர் தலையங்கங்களை உடனுக்குடன் தத்தமது மொழிகளில் மொழிபெயர்ப்பதற்கான அலுவலகர்களை கொழும்பில் உள்ள இராஜதந்திர தூதரகங்கள் வைத்திருந்தன என்பதையும் நான் நன்கு அறிந்திருந்தேன்.

விடுதலைப் போராட்டத் தரப்புகள் – மதியுரைஞர் பாலசிங்கம் வரை – என் ஆசிரியர் தலையங்கங்களை சிலாகித்துக், கவனித்து, சிரத்தையில் எடுத்தமை பற்றிய பல தகவல்கள் என்னிடம் உண்டு. இவற்றை அறியாத பலர் இன்று தங்கள் பெயர், முகவரி குறிப்பிடாத – பொறுப்புக் கூறக் கடப்பாடு இல்லாத – முகநூல்கள் மூலம் தங்கள் வல்லாண்மையை காட்டி வருகிறார்கள். வாசித்துச் சிரிப்பதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்?



# சிறுமியின் ஆடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்மதிப் படங்கள், ரோன் கமரா மூலம் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் மூலம் சில பகுதிகள் சந்தேகத்தின் அடிப்படையில் அடையாளப்படுத்தப்பட்டு தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவாவினால் நீதிமன்றத்தில் அறிக்கையாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இந்தப் புதிய பகுதிகளில் நீதிமன்ற உத்தரவுக்கமைய யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் தொல்லியல் துறை மாணவர்கள் மற்றும் நல்லூர் பிரதேச சபையின் பணியாளர்களின் உதவியோடு அகழ்வுப் பணிகள் கடந்த 2 ஆம் திகதி ஆரம்பமாகின.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அகழ்வின்போது ஆடை ஒன்றின் சில பகுதிகள் அடையாளம் காணப்பட்டிருந்தன. அந்த இடத்தில் நேற்று இடம்பெற்ற அகழ்வின்போது சிறுமியின் ஆடை ஒன்று முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் அகழ்வுப் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

எனினும், குறித்த பகுதியில் கடந்த மூன்று நாட்களாக இடம்பெற்ற அகழ்வுகளின்போது எதுவித மனித எச்சங்களும் அடையாளம் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.





# பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு செப்டெம்பரில் முடிவு கட்டப்படும்!

## நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார உறுதி



இலங்கையில் 1979 ஆம் ஆண்டு காலப் பகுதி முதல் அமுலில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம் எதிர்வரும் செப்டெம்பர் மாதமளவில் முழுமையாக நீக்கப்படும் என்று நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“1979ஆம் ஆண்டில் தற்காலிக ஏற்பாட்டு சட்டமாகவே பயங்கரவாதத் தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. எனினும், அது இன்றளவிலும் நீடிக்கின்றது.

இந்நிலையில் குறித்த சட்டத்தை நீக்குவது தொடர்பில் ஆராய்வதற்காகக் குழுவொன்று அமைக்கப்பட்டது. அந்தக் குழு தற்போது அனைத்து கருத்துகள் – யோசனைகள் தொடர்பில் ஆராய்ந்து வருகின்றது. பொதுமக்களின் கருத்துகளும் கோரப்பட்டன.

அந்தவகையில் செப்டெம்பர் மாதமளவில் பயங்கரவாதத் தடைச் சட்டம் முழுமையாக இரத்துச் செய்யப்படும்.

கருத்துச் சுதந்திரம், அரசியல் சுதந்திரம், அடையாளம் என்பவற்றைப் பாதுகாக்கும் வகையிலும், சர்வதேச நியமனங்களுக்கு அமையவும், மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் வகையிலுமே புதிய சட்டத்தை இயற்ற எதிர்பார்க்கின்றோம்.

பழைய பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பில் இருந்த விமர்சனங்கள் எல்லாம் நிவர்த்தி செய்யப்படும்.

அதேவேளை, நூதனபூகோலபயங்கரவாதத்துக்கு முகம் கொடுப்பதற்குரிய சட்டப் பாதுகாப்பு கவசமும் அவசியம். அதற்குரிய ஏற்பாடும் செய்யப்படும்.” – என்றார்.

---

## இன்று ஜூலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போராட்ட வரலாற்றில் 1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5ஆம் திகதி கரும்புலி கப்டன் மில்லரின் தாக்குதலுடன் கரும்புலிகள் சகாப்தம் தொடங்கிவைக்கப்பட்டது.

யாழ். வடமராட்சி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் மீது மில்லர் கரும்புலித் தாக்குதல் நடத்தி இன்று 36 ஆண்டுகள் கடந்துவிட்டன.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஒவ்வொரு திருப்புமுனைகளிலும் கரும்புலிகளின் நாமம் உள்ளது. அந்த வகையில்கடலிலும்எதிரிக்குதக்கபாடத்தை கொடுத்தார்கள் கடற்கரும்புலிகள்.

இவ்வாறு விடுதலைப் போரின் போராட்டப் பாதைகளில் தடைநீக்கிகளாக கரும்புலிகள் காணப்பட்டார்கள்.

2000 ஆம் ஆண்டு கட்டுநாயக்கா வான்படைத்தளம் மீது சென்று கரும்புலித் தாக்குதல் நடத்தப்பட்டது.

இவ்வாறு இலங்கையின் தென்பகுதியில் பல நிழற்கரும்புலிகள் தாக்குதல்களை நடத்தி வீர வரலாறானார்கள்.

2007ஆம் ஆண்டு அனுராதபுரம் வான்படைத்தளம் மீது எல்லாளன் நடவடிக்கை எனப் பெயர் சூட்டப்பட்ட கரும்புலித் தாக்குதல் 21 கரும்புலி மறவர்களால் மேற்கொள்ளப்பட்டது.

இந்தத் தாக்குதல் தரையிலும் கடலிலும் நடத்தப்பட்டுக் கொண்டிருந்த அதே வேளை, 2009 ஆம் ஆண்டு வான் கரும்புலிகளும் கொழும்பில் தாக்குதலை நடத்தினார்கள்.

இறுதிப்போர்நடைபெற்றமுள்ளிவாய்க்கால் மண்ணிலும் எத்தனையோ கரும்புலிகள் வீர வரலாறானார்கள்.

வெளியில் தெரியாத அந்த அற்புத மாமனிதர்களை இன்றைய நாளில் தரணியெங்கும் வாழும் தமிழர்கள் நினைவிற்கொள்கின்றார்கள்.

---

## செம்மணியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழி தொடர்பான இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் ஒன்பதாம் நாள் அகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

நேற்றைய அகழ்வின் போது சிறுவர்களின் என்புத் தொகுதி எனச் சந்தேகிக்கப்படும் மூன்று என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. இதுவரை 37 என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை 42 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இன்று சனிக்கிழமை 10ஆம் நாள் அகழ்வுப் பணிகள் இடம்பெறவுள்ளன.

யாழ். நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவின் கண்காணிப்பில் துறைசார் நிபுணரும் பேராசிரியருமான ராஜ் சோமதேவாவின் தலைமையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணிகளான வி.கே.நிரஞ்சன், ஞா.ரனித்தா, சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினர் ஆகியோரும் அகழ்வுப் பணிகளின் போது முன்னிலையாகி வருகின்றனர்.

நேற்று வடக்கு மாகாண சட்டத்தரணிகள் சங்கத்தினரின் சட்டத்தரணிகளான வி.மணிவண்ணன் உட்பட இருவர் அகழ்வுப் பணியின்போது முன்னிலையாகி இருந்தனர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அதிகாரிகளும் வலையில்!

ஊழல், மோசடி, முறைகேடுகள், லஞ்சம் போன்றவற்றில் ஈடுபட்ட தரப்பினருக்கு எதிரான நடவடிக்கை என்று தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் குறிப்பிடும் விவகாரம் இப்போது இரண்டு முனைகளில் முன்நகர்வது கவனிக்கத்தக்கது.

ஒருபுறம் - அரசியல்வாதிகள் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்படுகிறார்கள். தொடர் நடவடிக்கையாகக் கைது செய்யப்படுகிறார்கள். அரசியல்வாதிகள் கைது நடவடிக்கை தொடர்கதையாக நீடிக்கும், அது தொடர்பில் நாளொரு செய்தி வெளியாகும் என எதிர்பார்க்கலாம் என்று விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

மறுபுறம் - இத்தகைய ஊழல், முறைகேடுகளுக்குத் துணை போன உயர் அதிகாரிகள் குடையப்படுகிறார்கள். கைது செய்யப்படுகிறார்கள். சட்டம் அவர்கள் மீதும் தாராளமாகப் பாய்கின்றது.

வாகனங்களின் இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டிருந்த காலத்தில் கூட வெளிநாட்டிலிருந்து களவாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட வாகனங்கள் முறையற்ற விதத்தில் பதிவு செய்யப்பட்டமை தொடர்பாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் உயர் அதிகாரியாக இருந்தவர்கள் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள்.

நாட்டுக்கு வரும் வெளிநாட்டு பிரஜைகளுக்கு விமான நிலையத்தில் வைத்து விஸா வழங்கும் விடயத்தில் இடம்பெற்ற முறைகேட்டுக்கு ஒத்துழைத்தவர் என்று கருதப்படுகின்ற குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கைக்காக கைது செய்யப்பட்டு ஏறத்தாழ பத்து மாதங்களாக விளக்கமறியலில் இருக்கின்றார். இந்தப் பின்புலத்தில் அவர் குற்றத்தை ஒப்புக் கொண்டிருக்கிறார். ஆனால் இந்த விசா மோசடி முறைகேட்டில் அவரை விஞ்சிய அரசியல் தரப்புகள் - அரசியல் தலைமைகள் - சம்பந்தப்பட்டிருக்கின்றன என்பது உறுதிப்படுத்தப்படாத உண்மையாக உலவுகின்றது.

மனித பாவனைக்கு ஒவ்வாத தரமற்ற நோய் எதிர்ப்பு ஊசிகளை பல கோடி ரூபா பெறுமதிக்கு மோசடியாக இறக்குமதி செய்த விடயத்தில் சுகாதார அமைச்சராக இருந்தவர் மட்டுமல்லாமல், சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகளும் இப்போது சட்ட நெருக்கடிகளை எதிர்கொள்ளும் இக்கட்டுக்குள் சிக்கி இருக்கிறார்கள். பலர் கைது செய்யப்பட்டு இப்போது பிணையில் வந்திருக்கிறார்கள். சிலர் இன்னமும் விளக்க மறியல் தடுப்பில் இருக்கிறார்கள்.

அதேபோல ஏர்லங்கா நிறுவனத்தின் முன்னாள் தலைவர் உட்பட பலர் லஞ்சம், ஊழலைத் தடுக்கும் விசாரணை குழுவின் வலைக்குள் சிக்கி இருக்கின்றனர்.

தவிரவும் முறைகேடாகவும், மோசடியாகவும் பல்லாயிரம் கோடி ரூபாய்களை சுருட்டி கொண்ட அதிகாரிகள் முறையற்ற விதத்தில் சொத்துச் சேர்த்த குற்றச்சாட்டுகளில் இப்போது லஞ்ச, ஊழல் தடுப்புக் குழுவினால் வளைக்கப்பட்டு இருக்கின்றார்கள் என்ற செய்தியும் வெளியாகியிருக்கின்றது.

நோயாளிகளுக்கு அறுவை சிகிச்சைக்கான கருவிகள், மருத்துவ உபகரணங்களை வாங்கும் பெயரில் நோயாளிகளிடமிருந்து பெருந்தொகைப் பணத்தை முறையற்ற விதத்தில் சுருட்டிய உயர் வைத்திய நிபுணர் சட்டத்தின் விசாரணை வலைக்குள் சிக்கி இருக்கின்றார்.

எதிர்காலத்தில் அரசியல்வாதிகளின் ஊழலுக்குக் கண்மூடித்தனமாகத் துணை போகும் அரசு அதிகாரிகள் இப்போது படிக்கும் பாடம் காரணமாக தங்களைத் திருத்திக் கொள்வார்கள் என்று நம்பலாம்.

அரசியல்வாதிகளின் ஊழல், மோசடி, முறைகேடுகளுக்குத் துணை போனால் தாங்களும் சேர்ந்து கம்பி எண்ண வேண்டி வரும் என்ற பாடம் அரசு அதிகாரிகளுக்கு உரிய முறையில் போதிக்கப்பட்டால் நாட்டில் இந்த முறைகேடுகள் கணிசமாக குறையும் என்று நம்பலாம்.




# ஜனாதிபதி நிதியத்திற்கு கிடைத்த 100 மில்லியன் ரூபா நன்கொடை

ஐ.ஓ.சி. நிறுவனம் 100 மில்லியன் ரூபாவை ஜனாதிபதி நிதியத்திற்கு நன்கொடையாக வழங்கியுள்ளது.

ஐ.ஓ.சி. நிறுவனத்தின், இந்த நாட்டு முகாமைத்துவப் பணிப்பாளர் தீபக் தாஸ், இதற்கான காசோலையை ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்கவிடம் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் வைத்து கையளித்தார்.

இந்த நன்கொடையை,ஐ.ஓ.சி. நிறுவனம் இலங்கையின் கல்வி, சுகாதாரம் மற்றும் கலாசார துறைகளுக்கு வழங்கும் நன்கொடைகளுக்கு மேலதிகமாக வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அஸ்வெசும திட்டத்தின் மூலமாக பயனடைந்த 1.8 மில்லியன் மக்கள்




அஸ்வெசும திட்டத்தின் மூலம் 1.8 மில்லியன் மக்கள் பயனடைந்துள்ளனர் என கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் உபாலி பன்னிலகே தெரிவித்துள்ளார்.

அஸ்வெசும நலன்புரி திட்டத்தை பெற்றுக்கொள்வதற்காக மேலும் 900,000 பேர் விண்ணப்பித்துள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கதகவல்திணைக்களத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அமைச்சர் உபாலி பன்னிலகே இதனை குறிப்பிட்டுள்ளார்.

## உச்சம் தொட்டது சுங்க வருவாய்

கடந்த 6 மாதங்களில், இலங்கை சுங்கத்தின் வருவாய்ஒருடிரில்லியன்ரூபாயை கடந்துள்ளது.

அரசாங்கம் நிர்ணயித்துள்ள வருவாய் இலக்கை விட அதிகூடிய வருவாயை இலங்கை சுங்கம் இந்தாண்டு பெற்றுக்கொள்ளும் என இலங்கை சுங்கத் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் சீவலி அருக்கொட தெரிவித்துள்ளார்.




கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு இந்த விடயம் தொடர்பில் அவர் கருத்து தெரிவித்தார்.

## ஷாருக்கானின் 'சிட்டி ஒப் ட்ரீம் ஸ்ரீலங்கா' திறப்பு விழாவுக்கு டிக்கெட்டுகள் இல்லை

கொழும்பில் "சிட்டி ஒப் ட்ரீம் ஸ்ரீலங்கா" வின் பிரமாண்ட திறப்பு விழா எதிர்வரும் ஆகஸ்ட் 2 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், ஷாருக் கான் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிலையில், இந்த திறப்பு விழாவுக்கு போலி டிக்கெட்டுகள் விநியோகிக்கப்படுவது தொடர்பாக பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்து, சிட்டி ஒப் ட்ரீம் ஸ்ரீலங்காவின் நிர்வாகம் உத்தியோகபூர் அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில், இந்த திறப்பு விழா நிகழ்வில் தனிப்பட்ட அழைப்பிதழ் வழங்கப்பட்டவர்கள் மாத்திரமே பங்



கேற்க முடியும். திறப்பு விழா தொடர்பாக டிக்கெட்டுகளை வழங்கவோ, விநியோகிக்கவோ அல்லது விற்பனை செய்யவோ மூன்றாம் தரப்பினருக்கு அதிகாரம் இல்லை என ஏற்பாட்டாளர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர்.

உத்தியோகபூர்வமற்ற போலி டிக்கெட்டுகள் வழங்கப்படுவதாக எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் விழிப்புடன் இருக்கவும், இந்த டிக்கெட்டுகளை வாங்குவதை தவிர்க்குமாறு நாங்கள் கேட்டுக்கொள்கிறோம் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஏதேனும் துல்லியமான தகவல்களை பெற்றுக்கொள்ள தங்கள் உத்தியோகபூர்வ தொடர்பு வழிகள் ஊடாக அவர்களைத் தொடர்பு கொள்ளுமாறு நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது.



# மன்னார் நகரப் பிரதேச அபிவிருத்தி குழு பல்வேறு விடயங்கள் குறித்தும் ஆராய்வு

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் நகர பிரதேச அபிவிருத்திக் குழுவின் இவ்வருடத்திற்கான 2 ஆவது கூட்டம் அபிவிருத்திக் குழுத் தலைவரும் பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க தலைமையில் மன்னார் நகர பிரதேச செயலாளர் எம்.பிரதீபநின் நெறிப்படுத்தலின் கீழ் மன்னார் நகர பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது.

இதன் போது நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜெகதீஸ்வரன், திலகநாதன், காதர் மஸ்தான் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன் போது பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் ஒதுக்கீடுகள் குறித்து ஆராயபட்டமையோடு பல்வேறு திட்டங்கள் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

மேலும் மன்னார் பிரதேச செயலக ரீதியாகக் கலந்துரையாட பட வேண்டிய விடயங்கள் மற்றும் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

மன்னார் பிரதேச செயலக பிரிவில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் காணி மண் அகழ்வு, காற்றாலை மின் உற்பத்தி கோபுரங்கள் அமைக்கும் நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனவும், இந்த நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன எனவும், இதற்கு மாவட்டத்தில் உள்ள உரிய திணைக்கள அதிகாரிகள் துணை போகின்றனர் எனவும் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மாக்கஸ் அடிகளார் பகிரங்கமாகக் குற்றம் சாட்டினார்.

எனினும் இவ்விடயம் தொடர்பாக மக்களைப் பாதிக்கும் திட்டங்கள் குறித்து துரித நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான உபாலி சமரசிங்க தெரிவித்தார்.

மேலும் மன்னார் நகரில் சட்ட விரோதமாக முன்னெடுக்கப்பட்டு வரும் கடலட்டை பண்ணைகளை அகற்றவும், மக்கள் குடியிருக்கும் காணிகளுக்கு அனுமதி பத்திரங்கள் வழங்கி வைக்கப்பட வேண்டும் எனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், திணைக்கள தலைவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், படை உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.





# அஜித்குமார் கொலை வழக்கு: திருப்புவனத்தில் 3ஆவது நாளாக மாவட்ட நீதிபதி தீவிர விசாரணை

மடப்புரம் கோயில் காவலாளி அஜித்குமார் கொலை வழக்கில் திருப்புவனத்தில் நேற்று 3 ஆவது நாளாக மாவட்ட நீதிபதி விசாரணை நடத்தினார். சம்பவத்தை அறிந்தவர் நேரில் சாட்சியளிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே மடப்புரம் கோயில் காவலாளி அஜித்குமார் (வயது 29) பொலிஸார் தாக்கியதில் கொல்லப்பட்டார்.

இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம் மதுரை அமர்வு, மதுரை மாவட்ட 4 ஆவது நீதிமன்ற நீதிபதி ஜான்சுந்தர்லால் சுரேஷை விசாரித்து அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டது.

இதையடுத்து, ஜூலை 2 ஆம் திகதியிலிருந்து திருப்புவனம் பொலிஸ் நிலையம் அருகே நெடுஞ்சாலைத்துறை ஆய்வு மாளிகையில் தங்கி, மாவட்ட நீதிபதி ஜான்சுந்தர்லால் சுரேஷ் விசாரணை நடத்தி வருகிறார்.

அவரிடம் ஏ.டி.எஸ்.பி. சுகுமாறன், திருப்புவனம் பொலிஸ் ஆய்வாளர் ரமேஷ்குமார் ஆகியோர் வழக்கு தொடர்பான ஆவணங்களை அளித்தனர். தொடர்ந்து அவர் அஜித்குமார் தாயார், சகோதரர், உறவினர்கள், பொலிஸார், கோயில் பணியாளர்கள், ஆட்டோ ஓட்டுநர், அறநிலையத்துறை அதிகாரி உள்ளிட்ட பலரிடம் கடந்த 2 நாள்களாக விசாரணை நடத்தினார்.




இந்நிலையில், நேற்றும் திருப்புவனம் நெடுஞ்சாலைத்துறை ஆய்வு மாளிகையில் தங்கி மாவட்ட நீதிபதி விசாரணையை மேற்கொண்டார். இதன்போது மாவட்ட நீதிபதி முன் திருப்புவனம் அரசு மருத்துவமனை மருத்துவர் கார்த்திகேயன், ஆட்டோ ஓட்டுநர் அய்யனார் ஆஜராகி சாட்சியம் அளித்தனர்.

பின்னர் அரசு மருத்துவர் கார்த்திகேயன் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்,

“ஜூன் 28 ஆம் திகதி மாலை 6.30 மணியளவில் அஜித்குமாரை ஆட்டோவில் பொலிஸார் கொண்டு வந்தனர். நான் பரிசோதித்தபோது அஜித்குமார் ஏற்கெனவே உயிரிழந்துள்ளார் என்பது தெரியவந்தது. அதை நான் பொலிஸாரிடம் தெரிவித்தேன். உடலை பிரேதப் பரிசோதனை அறையில் வைக்கச் சொன்னேன். ஆனால், உயரதிகாரிகள் கூறியதாக, பொலிஸார் உடலை எடுத்துச் சென்றனர். இதை தான் நீதிபதியிடம் தெரிவித்தேன். மற்றபடி, அவரது உடலில் எந்த மாதிரியான காயங்கள் இருந்தன என்பதை நான் கவனிக்கவில்லை.” என்றார்.

மடப்புரத்தைச் சேர்ந்த ஆட்டோ ஓட்டுநர் அய்யனார் கூறுகையில்,

“எனது ஆட்டோவில் தான் பொலிஸார் அஜித்குமாரை ஏற்றி, திருப்புவனம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அஜித்குமாரை 4 பொலிஸார் தூக்கி வந்தனர். அப்போது அவர் உடல் அசைவற்று இருந்தது. கண்கள் மூடி இருந்தன. அவர் இறந்துவிட்டதாக பொலிஸாரும் பேசிக் கொண்டனர்.” என்றார்.

# அவிநாசி இளம்பெண் ரிதன்யாவின் தற்கொலை வழக்கு; மாமியார் கைது




அவிநாசி இளம்பெண் ரிதன்யா தற்கொலை வழக்கில், மாமியார் சித்ராதேவி நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

திருப்பூர் மாவட்டம் அவிநாசி கைகாட்டி புதூர் ஜெயம் கார்டனை சேர்ந்தவர் கவின்குமார் (வயது 29). இவரது மனைவி ரிதன்யா (வயது 27). கடந்த 3 மாதங்களுக்கு முன்பு இவர்களுக்கு திருமணம் நடந்த நிலையில், ரிதன்யா கடந்த 28 ஆம் திகதி மொண்டிபாளையம் அருகே காரில் விஷம் அருந்தி தற்கொலை செய்தார்.

இறப்பதற்கு முன்பாக ரிதன்யா, கணவர் மற்றும் குடும்பத்தினர் மீது குற்றம்சாட்டி தனது தந்தை அண்ணாதுரைக்கு அனுப்பிய வாட்ஸ்அப் குரல் பதிவு, தமிழ்நாட்டில் பலரையும் உலுக்கியது. கோட்டாட்சியர் விசாரணை நடந்துவந்த நிலையில், ரிதன்யாவின் கணவர் கவின்குமார், மாமனார் ஈஸ்வரமூர்த்தி மற்றும் மாமியார் சித்ராதேவி ஆகியோர் மீது துன்புறுத்தல் மற்றும் தற்கொலைக்கு தூண்டுதல் ஆகிய பிரிவுகளின் கீழ் சேவூர் பொலிஸார் வழக்கு பதிந்தனர்.

இதில் கவின்குமார் மற்றும் ஈஸ்வரமூர்த்தி மட்டும் கைது செய்யப்பட்டனர். சித்ராதேவி உடல்நிலையை காரணம் காட்டி கைது செய்யப்படவில்லை. இதையடுத்து வழக்கில் அரசியல் அழுத்தம் இருப்பதால் கைது செய்யப்படவில்லை என, ரிதன்யாவின் குடும்பத்தினர் குற்றம்சாட்டி வந்த நிலையில், 5 நாள்களுக்கு பிறகு நேற்று ரிதன்யாவின் மாமியார் சித்ராதேவி கைது செய்யப்பட்டார்.

ரிதன்யா தற்கொலை தொடர்பாக மூவரையும் பொலிஸார் தடுப்பு காவலில் எடுத்து விசாரிக்க வேண்டும் என ரிதன்யா குடும்பத்தினர் தெரிவித்து வரும் நிலையில், மாமியார் சித்ராதேவி கைது செய்யப்பட்டுள்ளார்.

# உக்ரைன் மீது ஒரே இரவில் ட்ரோன்கள், ஏவுகணைகளை வீசி ரஷ்யா தாக்குதல்




உக்ரைன் மீது நேற்று முன்தினம் ஒரே இரவில் 550 ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகளை வீசி ரஷ்யா தாக்குதல் நடத்தியதாக உக்ரைன் விமானப்படை தெரிவித்துள்ளது.

போர் தொடங்கியதில் இருந்து உக்ரைன் மீது நடத்தப்பட்ட மிகப்பெரிய வான்வெளித் தாக்குதல் இதுவாகும். இத்தாக்குதலில் கீவ் நகரில் மட்டும் 23 பேர் படுகாடமடைந்தனர்.

ஒருபக்கம் உக்ரைன் மீதான போரை முடிவுக்கு கொண்டுவர ரஷ்ய ஜனாதிபதி புடினுடன், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார். மறுபக்கம் உக்ரைன் மீதான தாக்குதலை மேலும் தீவிரமாக்கியுள்ளது ரஷ்யா.

உக்ரைன் மீது ரஷ்யா நேற்று முன்தினம் இரவு முழுவதும் 550 ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகளை வீசித் தாக்குதல் நடத்தியதாக உக்ரைன் விமானப்படை தெரிவித்துள்ளது. உக்ரைன் தலைநகர் கீவை குறிவைத்து நடத்தப்பட்ட இந்த ட்ரோன் மற்றும் ஏவுகணைத் தாக்குதல்களில் 23 பேர் காயமடைந்தனர். இந்த மிகப்பெரிய வான்வெளி தாக்குதலில் பயன்படுத்தப்பட்டதில் பெரும்பாலானவை ஷாஹெட் ட்ரோன்கள் என்றும் இதில் சுமார் 11 ஏவுகணைகள் பயன்படுத்தப்பட்டதாகவும் உக்ரைனின் விமானப்படை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி வெளியிட்ட எக்ஸ் பதிவில்,

“ரஷ்யா நடத்திய இந்த மிகப் பெரிய வான்வழித் தாக்குதலில் மொத்தத்தில், 550 ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகள் வீசப்பட்டன. இதில் குறைந்தது 330 ரஷ்ய – ஈரானிய ஷாஹெட்கள் இருந்தன.

ட்ரம்ப் மற்றும் புதினுக்கு இடையேயான பேச்சுவார்த்தைகளும், உக்ரைன் மீதான தாக்குதலுக்கான எச்சரிக்கை சைரன்களும் கிட்டத்தட்ட ஒரே நேரத்தில் நடக்கின்றன. போரையும், பயங்கரவாதத்தையும் முடிவுக்குக் கொண்டுவரும் எண்ணம் ரஷ்யாவுக்கு இல்லை என்பதையே இது காட்டுகிறது. இன்று காலை 9 மணியளவில்தான் கீவில் வான்வழித் தாக்குதல் எச்சரிக்கை சைரன்கள் ஓய்ந்தன. இது ஒரு கொடூரமான, தூக்கமில்லாத இரவு. இந்த ரஷ்ய தாக்குதல் கீவை மட்டுமல்ல, டினிப்ரோ, சுமி, கார்கிவ், செர்னிஹிவ் உள்ளிட்ட பகுதிகளையும் பாதித்தது. தற்போது வரை, 23 பேர் காயமடைந்துள்ளனர் என தகவல்கள் கிடைத்துள்ளன.” என்று தெரிவித்தார்

முன்னதாக, கடந்த வாரம் ரஷ்யா உக்ரைன் மீது 537 ட்ரோன்கள் மற்றும் 60 ஏவுகணைகளை வீசித்தாக்கியது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் மீண்டும் மிகப்பெரிய தாக்குதலை ரஷ்யா தொடுத்துள்ளதால், உக்ரைன் முழுவதும் பதற்றம் அதிகரித்துள்ளது.

# உக்ரைன் உடனான போரை புடின் நிறுத்துவார் எனத் தோன்றவில்லை

## டொனால்ட் ட்ரம்ப் தெரிவிப்பு



உக்ரைன் உடனான போரை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் நிறுத்துவார் என்று தோன்றவில்லை என்றும் அவர் விடயத்தில் தான் ஏமாற்றம் அடைந்துள்ளதாகவும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரத்தின்போது டொனால்ட் ட்ரம்ப், “நான் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் உடனடியாக உக்ரைன் – ரஷ்யா போரை நிறுத்துவேன்.” என வாக்குறுதி அளித்தவர்.

இரண்டாவது முறையாக டொனால்ட் டரம்ப் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டு 6 மாதங்களுக்கு மேல் ஆகும் நிலையில், உக்ரைனுக்கு எதிரான ரஷ்யாவின் போர் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. மீண்டும் அமெரிக்க ஜனாதிபதியானதில் இருந்து போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக டொனால்ட் டரம்ப், விளாடிமிர் புடினுடன் 5 முறை தொலைபேசியில் பேச்சுவார்த்தை நடத்தினார்.

விளாடிமிர் புடினுடனான தொலைபேசி பேச்சுவார்த்தை குறித்து நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை டொனால்ட் ட்ரம்ப் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“எங்கள் தொலைபேசி உரையாடல் நீண்ட நேரம் நடைபெற்றது. ஈரான் உட்பட பல்வேறு விஷயங்களைப் பற்றி நாங்கள் பேசினோம். உக்ரைனுடனான போரைப் பற்றியும் பேசினோம். ஆனால், போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகளில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. இவ்விஷயத்தில் எனக்கு மகிழ்ச்சி இல்லை. விளாடிமிர் புடின் விஷயத்தில் நான் ஏமாற்றம் அடைந்துள்ளேன். உக்ரைன் மீதான போரை அவர் நிறுத்துவார் என்று தோன்றவில்லை.” என்று தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 05.07.2025

## மேஷம்



உங்கள் அணுகுமுறையில் வன்மையை தவிர்க்க வேண்டும். அமைதியாக இருக்க வேண்டும். நிறைவேறாத உங்களின் லட்சியங்களுக்காக வருந்த வேண்டாம்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். சிறப்பாக திட்டமிட்டால் முன்னேற்றம் காணலாம்.

நட்பான அணுகுமுறை மற்றும் இனிமையான வார்த்தைகள் மூலம் உங்கள் துணையுடனான நட்பை இனிமையாக்கலாம்.

இன்று நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும். உங்கள் செலவுகளை கண்காணியுங்கள்.

இன்று செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினை ஏற்படலாம். எண்ணெய் பதார்த்தங்கள் உட்கொள்வதை தவிர்க்கவும்.

## ரிஷபம்



பிரச்சினை அல்லது மனக் குழப்பம் காரணமாக இன்றைய நாளை அனுபவிக்கும் மனநிலை உங்களிடம் இருக்காது. நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

நீங்கள் உங்கள் பணிகளை திறம்பட மேற்கொள்வீர்கள். உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்காத காரணத்தினால் நீங்கள் ஏமாற்றமடைவீர்கள்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுவதன் மூலம் நல்லுறவை வளர்ப்பீர்கள்.

இன்று கணிசமான தொகை சம்பாதித்தாலும் தவிர்க்க முடியாத செலவுகள் காரணமாக நீங்கள் பணத்தை தக்க வைத்துக்கொள்ள இயலாது.

பெரிய அளவிலான ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது. ஆனால் நீங்கள் அசௌகரியமாக உணர்வீர்கள்.

## மிதுனம்



இன்று நீங்கள் மகிழ்ச்சியாக உற்சாகமாக இருப்பீர்கள். உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும்.

உங்கள் பணிக்கு பாராட்டு கிடைக்கும். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் நேர்மையாக வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.

## கடகம்



இன்று உங்கள் பொறுமை சோதனைக்குள்ளாகும் நாள். முறையான தகவல் பரிமாற்றம் இல்லாத காரணத்தால் உங்கள் பிரியமான ஒருவருடன் மோதல் ஏற்படலாம். இன்று சிறந்த பலன்களைக் காண நீங்கள் உங்கள் புத்திசாலித்தனத்தைப் பயன்படுத்த வேண்டும்.

கடின உழைப்பின் மூலம்தான் வெற்றி காண முடியும். பணியிடத்தில் சமயோசித புத்தியை பயன்படுத்த வேண்டியது அவசியம்.

உங்கள் மனக்குழப்பத்தை உங்கள் துணையிடம் காண்பிக்காதீர்கள். அமைதியான மனநிலையில் இருப்பது சிறந்தது.

இன்று நிதிநிலை சராசரியாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள இயலாது.

## சிம்மம்



உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். இன்று வெற்றி காண்பதற்கு முறையாக திட்டமிட வேண்டியது அவசியம்.

உங்கள் பணியில் தவறுகள் நேரலாம். பணிகளை முடித்து ஒப்படைப்பதற்கு முன் கவனமாக சரி பார்க்க வேண்டும்.

உங்கள் துணையின் விருப்பபடி நடந்து கொள்வதன் மூலம் உறவில் மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்ள முடியும்.

இன்று நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும். ஆனால் பூர்வீகச் சொத்து அல்லது எதிர்பாராத வகையில் பண வரவு காணப்படும்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. அதிகப் பணிகள் காரணமாக தலைவலி ஏற்படலாம்.

## கன்னி



இன்று நீங்கள் உங்களை மகிழ்ச்சியாக வைத்திருக்க வேண்டும். எந்தச் செயலிலும் உணர்ச்சிவசப்படாதீர்கள். இசை கேட்பதன் மூலம் மன ஆறுதல் பெறலாம்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை திறம்பட ஆற்றுவதற்கு நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் சூடான விவாதம் நடக்க வாய்ப்புள்ளது. எனவே அமைதியாக இருப்பது சிறந்தது.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். அனாவசியமாக பணம் செலவாகாமல் காத்துக் கொள்ளுங்கள்.

அதிக உடல் உழைப்பு காரணமாக தலைவலி ஏற்படலாம். காயம் ஏற்படாமல் இருக்க வாகனம் ஓட்டும்போது கவனமாக இருக்க வேண்டும்.

## துலாம்



தொடர் முயற்சி மூலம் இன்று நீங்கள் வெற்றி காணலாம். உங்கள் நலம் விரும்பிகள் மற்றும் நண்பர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். இன்று நீங்கள் சிறப்பாக செயல்படுவீர்கள்.

உங்கள் சகபணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். பணியில் உங்கள் திறமைக்கு பாராட்டு பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் சிறந்த உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள்.இதனால் இருவருக்கும் இடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

அதிர்ஷ்டம் காரணமாக ஊக்கத் தொகை அல்லது சலுகை வகையில் இன்று பண வரவு ஏற்படும்.

இன்று நிறைந்த ஆற்றலுடன் இருப்பீர்கள். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## விருச்சிகம்



இன்று நீங்கள் உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்தினால் உங்கள் லட்சியங்களை அடையலாம். சிறந்த பலனைக் காண இன்று கிடைக்கும் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

உங்கள் பணிக்கு அங்கீகாரம் பெறுவீர்கள். உங்கள் செயற்றிறன் சிறப்பாக இருந்தாலும் நீங்கள் முழு திருப்தியடைய மாட்டீர்கள்.

உங்கள் துணையுடன் பேசும் போது கவனமாகப் பேச வேண்டும். நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

காப்பீடு போன்ற வகையில் எதிர்பாராத பண வரவு காணப்படும். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். பணத்தை கவனமாகக் கையாளவும்.

# இன்றைய ராசி பலன்கள் - 05.07.2025




இன்று சகஜமான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள். பிறருடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள். உங்கள் தொடர்பாடலை கட்டுப்படுத்த வேண்டும்.

அதிக பதட்டம் காரணமாக பணியின் போது தவறுகள் செய்தது போல உணர்வீர்கள். தன்னம்பிக்கையுடன் இருங்கள்.

உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் இருவரும் நல்ல புரிந்துணர்வையும் மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொள்வீர்கள்.

உங்களால் இன்று பணம் சம்பாதிக்க இயலும். என்றாலும் வீணான செலவு காரணமாக நீங்கள் சேமிக்க இயலாது.




நீங்கள் விருந்துகளில் கலந்து கொள்ள நேரலாம். மற்றும் உங்களுக்கு பிரியமானவர்களை உங்கள் வீட்டுக்கு அழைக்க நேரலாம். உங்கள் முயற்சியின் மூலம் உங்கள் வாழ்க்கைத் தரம் உயரும்.

நீங்கள் உங்கள் பணிகளை விரைந்து ஆற்றுவீர்கள். என்றாலும் பதட்டத்திற்கு ஆளாவீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பாக இருக்க முயலவீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

இன்று நீங்கள் சிறிய கடன் வாக நேரலாம். மேலும் இழப்பு ஏற்படாமல் இருக்க சிறிது பணத்தை சேமியுங்கள்.

தாயின் உடல் நலத்துக்காகச் செலவு செய்வீர்கள். பெரிய அளவில் பாதிப்பு இருக்காது எனவே கவலை வேண்டாம்.




உங்கள் மனதிலிருந்து எதிர்மறை எண்ணங்களை நீக்காவிடில் உங்கள் வளர்ச்சி பாதிக்கும். மதிப்பு மிக்க பொருளை இழக்க வாய்ப்புள்ளதால் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் சக பணியாளர்களுடன் கருத்து வேறுபாடு காணப்படும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையிடம் உங்களுக்கு அசௌகரியமான உணர்வு காணப்படும். இதை அவருக்கு தெளிவாக உரைப்பது சிறந்தது.

இன்று சில நிதி கட்டுப்பாடுகள் காணப்படும். நிதியில் ஸ்திரத்தன்மை காண நீங்கள் உங்கள் செலவுகளை கண்காணிக்க வேண்டும்.




உங்கள் வாழ்வில் சிறந்த வளர்ச்சி காணப்படும். உங்கள் செயல்களை இன்று விரைந்து ஆற்றுவீர்கள்.

வெளிநாட்டுக்குச் செல்லும் வாய்ப்பு கிடைக்கும். உங்கள் வளர்ச்சி குறித்து மகிழ்ச்சி அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் உற்சாகமாக நடந்து கொள்வீர்கள். அவருடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள்.

இன்று நிதிநிலைமை அதிர்ஷ்டகரமாக இருக்கும். நீங்கள் விரைந்து பணம் சம்பாதிப்பீர்கள்.

இன்று துடிப்பாகவும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# முறைகேடாக மாத்திரை பெற முயற்சித்த மட்டு. வைத்தியசாலை சிற்றூழியர் கைது!

**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் போலியாக வைத்தியரின் மருந்துச் சீட்டை தயாரித்து முறைகேடாக விலை உயர்ந்த நோய் வலிக்கான றமடோல் என்ற மாத்திரையை தனியார் ஒருவரை வைத்து பெற்றுகொள்ள முயற்சித்த – வெளிநோயாளர் பிரிவில் கடமையாற்றி வரும் – ஆண் சிற்றூழியர் ஒருவரை நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலையில் தாங்கள் கைது செய்துள்ளனர் என மட்டு. தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மாத்திரை சத்திரசிகிச்சை செய்யப்பட்ட பின்னரும் மற்றும் வலி, மனநலன் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படுவது. வைத்தியரின் மருந்துச் சீட்டு இல்லாமல் வைத்தியசாலை மருந்தகத்திலோ வெளியிலுள்ள பார்மஸிகளிலோ பெற்றுக் கொள்ளமுடியாதது. இவ்வாறான மாத்திரையைப் பெற்றுக் கொள்வதற்காக வைத்தியரின் மருந்துச் சீட்டைப் போலியாகத் தயாரித்து அதனை அவருடைய பிரதேசத்தைச் சேர்ந்த ஆண்களை வரவழைத்து வைத்தியசாலை மருந்தகத்தில் நீண்ட நாள்களாக இவர் பெற்று வந்துள்ளார்.

இதனையடுத்து வைத்தியசாலை மருந்தகத்தில் மருந்து மாத்திரை வழங்குபவர்கள் வைத்தியரின் மருந்து சீட்டு போலியானது எனவும், அதனை தயாரித்து முறைகேடாக மாத்திரையை பெற்றுவந்த வெளிநோயாளர் பிரிவில் கடமையாற்றி வந்த ஆண் சிற்றூழியரை கண்டறிந்தனர்.

இது தொடர்பாக வைத்தியசாலை பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளமையை அடுத்து நேற்றுமுன்தினம் வழமைபோல அந்தச் சிற்றூழியர் மாத்திரையைப் பெற்றுக் கொள்வதற்காக அவருடைய ஊரைச் சேர்ந்த ஒருவரை வரவழைத்து அவரின் நோய்க்கு குறித்த மாத்திரையை வழங்கும்படி வைத்திய மருந்து சீட்டை தயாரித்து அவருக்கு உதவி செய்வுத போல அந்த மருந்து சீட்டுடன் அவரைக் கூட்டிக் கொண்டு வைத்தியசாலை மருந்தகத்துக்குச் சென்றுள்ளார்.

இதன் போது மருந்து வழங்குபவர்கள் அந்த மருந்து சீட்டை வாங்கி கொண்டு காத்திருக்கும்படி தெரிவித்துக் கொண்டு வைத்திய பணிப்பாளருக்கு அறிவித்தனர். அதையடுத்து அங்கு பொலிஸார் வரவழைக்கப்பட்டு, முறைகேடாக போலி மருந்துச் சீட்டு தயாரித்து மாத்திரை பெற்றுக் கொள்ள முயற்சித்த சிற்றூழியரைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபர் நீண்டகாலமாக இந்த மாத்திரையைப் பெற்று வந்துள்ளமையுடன் வலி நோவுக்கு பாவிக்கும் இந்த மாத்திரையை போதைக்காக பாவித்து, அதற்கு அடிமையாகியுள்ளமையுடன் அதனைப் பெற்று வேறு நபர்களுக்கும் வழங்கி வந்துள்ளார் எனப் பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து பொலிஸார் குறித்த நபருக்கு எதிராக தண்டனைச்சட்டக் கோவை 459 பிரிவின் கீழ் போலியாக மருத்துவ சீட்டு தயாரித்த குற்றச்சாட்டின் கீழ் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் நேற்று வெள்ளிக்கிழமை வழக்குத் தாக்குதல் செய்து அவரை ஆஜர்படுத்தினர். அவரை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை இவ்விடய்ச்ம் தொடர்பாக மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.